## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிகூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு

பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டில் இருந்து நிதிக்கூற்றில் பெற வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 104, 676,878 என குறிப்பிடப்பட்ட போதிலும்,17 பெப்ரவரி 2020 திகதியிடப்பட்ட ரிஜஎன் 409015026-7000 இலக்கமிடப்பட்ட பெறுமதி சேர் வரி தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் சபைக்கு செலுத்துவதற்கு எதுவித மிகுதியும் இல்லை. ஆனால் சபை இந்த மிகுதியை நீக்குவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. | இறைவரி திணைக்களத்தால் எங்களுக்கு அனுப்பப்பட்ட 17.02. 2020 திகதியிடப்பட்ட ரிஜஎன் 409015026-7000 இலக்கமிடப்பட்ட பெறுமதி சேர் வரி தொடர்பாக கடிதத்தில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு செலுத்துவதற்கு எந்த மீதியும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.இதனை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பித்து அவர்களது அறிவுறுத்தலை பின்பற்ற எதிர்பார்க்கப்படுகின்றது. | கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி கூற்றுக்களில் காட்டப்பட்ட 2009 ஆம் ஆண்டில் இருந்து ஊவா மாகாண விவசாய ஏற்றுமதி வலயத்தில் இருந்து பெற வேண்டிய மீதி ரூபா 10,403,683 தொகையானது,குறிப்பிட்ட வருடத்தில் கடன்களை பெற்றவர்கள் அடையாளம் காணப்பட்டனர். ஆனால் உறுதி செய்து மற்றும் மீதிகளை பெறுவதற்கு முடியவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் வழிகாட்டலின் படி,மீதியை ஒப்பிடுவதற்காக முன்னைய பேரேடு மற்றும் பற்றுசீட்டுகள் இப்பொழுதும் பரிசோதிக்கப்படுகின்றன. | மீதிகளை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடன்பட்டோர்களிடம் உள்ளடக்கப்பட்ட 11 கடன் மீதிகள் ரூபா 9,468,431 தொகையானது 06 மாத காலத்திற்கு வரையறுக்கப்பட்ட போதிலும், மீள பெறப்படவில்லை. | இன்னும் மீளப்பெறப்படுகின்றன. | உடனடியாக மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2019 ஆம் ஆண்டிற்கான செலுத்த வேண்டிய செலவு ரூபா 78,877,848 ஆகும். இந்த மீதியினுள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய செலவு ரூபா 1,272,629 உள்ளடக்கப்பட்டிருந்தது. | ரூபா 772,629 தொகையான கொடுப்பனவிற்கு பற்றுச்சீட்டு இல்லாத காரணத்தினால் 2020 இல் செலவில் திருத்தங்களை செய்வதில் தாமதம் ஏற்படுகின்றது.2018 இல் ரூபா 500,000 பெறுமதியான காசோலை கொடுப்பனவிற்காக வழங்கப்பட்டது.ஆனால் கம்பனியால் சமர்ப்பிக்கப்படவில்லை.எனவே காசேலை வலுவிழந்தது மற்றும் ஏற்பாடு ஒதுக்கப்பட்டது. | ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட வுடன் தாமதமின்றி கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 395 | 31 திசெம்பர் 2019 வரை 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 263,078 பெறுமதியான அங்கிகரிக்கப்படாத வைப்புக்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | வங்கி மற்றும் பொருத்தமான துறைகளின் விசாரணையின் பின் ரூபா 263,078 தொகையான அங்கீகரிக்கப்படாத வைப்புக்கள் வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்படும். | நிதி ஒழுங்குமுறைக்கு இணங்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 396 | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கடன் கொடுத்தோருக்காக வழங்கப்பட்ட 06 மாதங்களை கடந்த ரூபா 900,000 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது | இந்த காசோலையை கையெழுத்திற்கு அனுப்பியதன் பின் திகதியை நீடிப்பதற்கு மற்றும் மீள வழங்கும் எதிர்பார்ப்புடன் அவை வைத்திருக்கப்படும். | நிதி ஒழுங்குமுறைக்கு இணங்க வேண்டும். |

கொடுப்பனவிற்கு
சமர்ப்பிக்கப்படாத
காசோலைகளாக
நிதிக்கூற்றுக்களில்
காண்பிக்கப்பட்டிருந்துத.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 66,745,210 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 99,415,402 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 166,160,612 தொகையான மிகையொன்று அவதானிக்கப்பட்டது.துணைக்கம்பனியின் முதலீட்டின் இருந்து பெறப்பட்ட ரூபா 55,333.427 இலாபம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது துணைக்கம்பனியான டிஎச்பிஎல் முதலிட்ட பங்கின் இலாபம் 160 சதவீதத்தால் அதிகரித்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சபையின் ஏற்றுமதி அபிவிருத்தி செலவு 21 சதவீதத்தால் குறைவடைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 31 திசெம்பர் 2019 இல் ரூபா 105,117,477 தொகையான முன்னுரிமை பங்குகளில் முதலீடு செய்த 29 கம்பனிகள் மூடப்பட்டது மற்றும் செயலற்றது.கம்பனியை கண்டுபிடிக்க முடியாத காரணத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இங்கு குறிப்பிடப்பட்ட கம்பனிகள் செயலற்றன.நீதவான் தலைமையதிபதி திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி,கம்பனி பதிவாளர் திணைக்களத்திடம் இருந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.கம்பனி சட்டத்தின் 487(5) சட்டத்தின் படி,கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.எனவே,கம்பனி பதிவாளர் திணைக்களமிடமிருந்து ஏற்கனவே கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பறிமுதல் செய்யப்பட்டனவா என கேட்டு கொண்டோம். | செயற்படாத கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைமையை அவதானித்த பின் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 31 திசெம்பர் 2019 இல் சபை 33 கம்பனியின் சாதாரண பங்குகளில் ரூபா 58,312,483 தொகையை முதலீடு செய்தது மற்றும் அந்த கம்பனிகளில் 31 | இங்கு குறிப்பிடப்பட்ட பல கம்பனிகள் செயலற்று உள்ளன.செயற்பட்டு கொண்டிருக்கும் கம்பனியின் பங்கு இலாபம் பெறப்பட்டது. | செயற்படாத கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனிகள் தொடர்ந்தும் இலாபமற்று மற்றும் செயற்பாடு அற்ற நிலையில் உள்ளது. அத்துடன் சபையானது கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் கம்பனியின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை கைப்பற்ற முடியுமா என விசாரணை நடத்தியது.குறிப்பிட்ட ஆண்டில் 2 கம்பனிகளிடமிருந்து ரூபா 193,538 பங்கு இலாபம் பெறப்பட்டது.அதன் படி, மொத்த முதலீட்டில் இலாப வீதம் தொடர்ந்தும் 0.4 சதவீதமாக காணப்பட்டது. | | நிலைமையை அவதானித்த பின் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வரையறுக்கப்பட்ட எக்ஸ்போ முகாமைத்துவ தனியார் கம்பனி சுயமாகவே கம்பனியை மூடியது.2010.01.22 அன்று கம்பனி பெயர் பதிவு புத்தகத்தில் இருந்து கம்பனியின் பெயர் நீக்கப்பட்டது. 10 வருடங்களாக காணப்பட்ட போதிலும்,அன்றிலிருந்து இன்றைய காலம் வரை நிதிக்கூற்றுகளில் சாதாரண பங்குகளிற்று ரூபா 1,980,130 தொகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது.ஆனால் கணக்குகளில் இருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை | வரையறுக்கப்பட்ட எக்ஸ்போ முகாமைத்துவ தனியார் கம்பனி ஏற்கனவே முதலீட்டு பெறுமதிக்கு குறைவு ஏற்பாட்டினை செய்தது.தேவையான அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்பு புத்தகங்களில் இருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பொருத்தமான அனுமதி பெற உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1980 மற்றும் 1990 களில் முயற்சியாளரிற்கு கடன் திட்டத்தில் வழங்கப்பட்ட கடன்களில் 31 டிசம்பர் 2019 இல் ரூபா 40,262,508 கடன் மீதியாக காணப்பட்டது மற்றும் சபை குறித்த ஆண்டில் ரூபா 538,993 தொகையை மாத்திரம் திரும்பி பெற்றது.இது ஆண்டு ஆரம்பத்தில் 1.32 சதவீத கடன் மீதியாக காணப்பட்டது.அதன்படி சபையானது ஏற்றுமதி கடனை திரும்ப பெறுவதில் பலவீனமான நிலையில் உள்ளது. | அனேகமான கடன் கொடுத்த கம்பனிகள் மூடப்பட்டன மற்றும் செயலற்றன.இந்த கம்பனிகளை கண்டுபிடிப்பதில் தவறியமையாலும்,விலாசத்தை கண்டு பிடிக்க முடியாமையாலும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியவில்லை.ஆகையால்,தவணைமுறையில் தொகைகளை நடைமுறையில் இயங்கி கொண்டிருக்கும் கம்பனிகள் மீது வழக்கு தொடருவதன் மூலம் அல்லது குறிப்பிட்ட ஆண்டில் நேரடி தொடர்பின் மூலம் மீள பெற்று கொள்ள முடியும். | விரைவாக பொருத்தமான அனுமதியை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) உத்தியோகத்தர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி,பட்டறை மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்கு பாரபட்சமின்றி சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. ஒரே உத்தியோகத்தர்கள் ஒரு வருட காலப்பகுதியில் பல தடவைகள் சந்தர்ப்பத்தினை பெறுகின்றனர் மற்றும் பல ஆண்டுகளாக இருந்தும் சில உத்தியோகத்தர்கள் சந்தர்ப்பத்தை பெறவில்லை.எனவே பயிற்சி நடவடிக்கைகள் ஒரு செயல்முறையை தயாரிக்க வேண்டும் மற்றும் இயக்குனர் சபையிடம் இருந்து அனுமதியை பெற வேண்டும். ஆனால் அவ்வாறு அனுமதி பெறப்படவில்லை. | பயிற்சி,பட்டறைக்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது மற்றும் அந்த குழுவின் பரிந்துரைகளின் படி உத்தியோகத்தர்களை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இயக்குனர் சபையின் அனுமதி பெற்றதன் பின்பு ஒவ்வொரு உத்தியோகத்தரும் பயிற்சி சந்தர்ப்பங்களை பெறக்கூடியவாறு ஒரு செயல்முறையை தயாரிக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2000 முயற்சியாளரை ஏற்றுமதியாளராக மாற்றுவதற்குரிய நிகழ்ச்சிக்கு 2017 இல் இருந்து 2019 வரைக்கும் ரூபா 34,116,691 செலவிடப்பட்டது.2017/03/20 இலக்கமிடப்பட்ட 2017 மார்ச் 30 திகதியிடப்பட்ட இயக்குனர் சபை பத்திரத்தில் இந்த நிகழ்ச்சியை அமுல்படுத்துவதற்கு கட்டுபடுத்தல் குழு நிறுவுவதற்கு குறிப்பிடப்பட்ட போதிலும்,அவ்வாறு செய்யப்படவில்லை.மேலும்,இந்த நிகழ்ச்சிக்கு இடங்களை தெரிவு செய்ய அரச துறை நிறுவனங்களிடமிருந்து விலையை கோராமல் தனியார் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டது மற்றும் 6 தனியார் விடுதிகளில் நடத்துவதற்கு ரூபா 3,473,425 செலவிடப்பட்டது.முறையற்ற கொள்வனவு செயல்முறையின் காரணமாக மாத்தறையில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சிக்கு ரூபா 299,500 பொருளாதாரமற்ற செலவாக உணவு,விடுதி,மற்றும் கண்காட்சி நிலையத்துக்கு மற்றும் குருநாகல் நிகழ்ச்சிக்கு ரூபா | புதில்கள் வழங்கப்படவில்லை. | நிகழச்சியின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவதற்கு சபை முயற்சியாளரின் பொருத்தமான நிலைமைக்கு கட்டுப்பாட்டு குழுவினை நியமிப்பதன் மூலம் வெளிநாட்டு சந்தையில் போட்டியினை எதிர் கொள்ள ஆதரவு வழங்க வேண்டும்.மற்றும் இயக்குனர் சபையின் தீர்மானத்தின் கீழ் ஒரு திடமான திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

57,900 உணவுக்காகவும் செலவிடப்பட்டது.மேலும்,ரூபா 215,900 மதிப்பிடப்பட்ட செலவில் இருந்து அதிகமாக செலவு செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது.இந்த நிகழ்ச்சி 2000 முயற்சியாளரை அறிமுகப்படுத்துவதற்கான போதிலும்,2017-2109 காலப்பகுதியில் 155 ஏற்றுமதிகள் கவனத்தை ஈர்த்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி 257 மற்றும் 228 ஆக காணப்பட்ட போதிலும், 29 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், அவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 12 பதவிகளும் 09 கீழ் மட்டத்திலான பதவிகளும் 08 ஆரம்ப மட்டத்திலான பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. இந்த வெற்றிடங்களில் மேலதிக இயக்குனர் தலைமையதிபதி (அபிவிருத்தி),மேலதிக இயக்குனர் தலைமையதிபதி (நிதி மற்றும் முகாமைத்துவம்) ஆகிய பதவிகள் சபையின் முக்கிய குறிக்கோளை அடைவது தொடர்பாக நேரடி தொடர்புடையவை. | 31 டிசம்பர் 2019 இல் நாங்கள் தேர்தல் ஆணைக்குழுவிடம் இருந்து மேலதிக இயக்குனர் தலைமையதிபதி (அபிவிருத்தி),மேலதிக இயக்குனர் தலைமையதிபதி (நிதி மற்றும் முகாமைத்துவம்) பதவி வெற்றிடங்களிற்கு நியமனம் மேற்கொள்வதற்கு 2019.09.16(ஆங்கிலம்) மற்றும் 2019.09.17(சிங்கள மற்றும் தமிழ்)பத்திரிகை விளம்பரங்களை பயன்படுத்தி தேர்தல் விதிகளை மீறாமல் விண்ணப்பங்களை கோருவதற்கு அனுமதி பெற்றோம்.எனினும்,இந்த இரண்டு வெற்றிடத்திற்கு விண்ணப்பித்தவர்களின் அனுபவத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக நியமனங்கள் மேற் கொள்ளப்படவில்லை.ஆகையால்,எங் களுடைய 2020.03.20 திகதியிட்ட கடித இல ஈடிபி/எச்ஆர்எம்/எவ்ஐ/ஆர்இசி/08-2 த்தின் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு முடிவுகளின் படி இந்த இரண்டு பதவிகள் உள்ளடங்கலாக 7 பதவிகளிற்கு கட்டமைக்கப்பட்ட நேர்முக தேர்வின் மூலம் ஆட்சேர்ப்பதற்கு அனுமதிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டது.ஆனால் இந்த இரண்டு பதவிகளிற்கு அனுமதி பெறப்படவிலலை.ஆகையால்,நாங்கள் 2020.07.01 திகதியிட்ட ஈடிபி/எச்ஆர்எம்/எவ்ஐ/ஆர்இசி.˙.08-1 இலக்கமுடைய கடிதத்தை அனுமதிக்காக தேர்தல் | சபையின் முக்கிய குறிக்கோளை அடைவதற்கு பொருத்தமான பதவிகளிற்கு உடனடியாக ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஆணைக்குழுவிற்கு அனுப்பினோம்.இரண்டு புதிய உத்தியோகத்தர்கள் இயக்குனர்( பிராந்திய அபிவிருத்தி) மற்றும் இயக்குனர் ( கொள்கை மற்றும் தந்திரோயாய திட்டமிடல்) பதவி வெற்றிடத்திற்காக 2020.06.25 தொடக்கத்தில் இருந்து நியமிக்கப்பட்டனர்.

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியிடம் இருந்து டிஎச்பிஎல் கட்டிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூபா 1500 வாடகையாக 44,990 சதுர அடிக்கு ரூபா 67.48 மில்லியனை வாடகையாக செலவிடுவதற்கு ஏற்பாடு பற்றாக்குறையாக இருந்தது.கட்டிடத்தின் வாடகையை குறைப்பதன் மூலம் மற்றும் இடத்தின் உச்ச பாவனைக்காகவும் சபை 2017 ஆம் ஆண்டில் இருந்து பராமரித்தல் செலவினை 5 மாடிகளில் இருந்து 4 மாடிகளிற்கு குறைப்பு செய்வதன் மூலம் மறுகட்டமைப்பு செய்ய தொடங்கியது.ஆனால், மதிப்பிடப்பட்ட செலவு தயாரிக்கப்படவில்லை மற்றும் கொள்வனவு திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. அரச பெறுகைகள் வழிகாட்டலை பின்பற்றாமல் தெரிவு செய்யப்பட்ட இலங்கை கட்டிடகலை நிறுவனமானது நிதி மற்றும் தொழில்நுட்ப அறிக்கையை தயாரிக்க ரூபா 175,950 கட்டணத்தையும் மற்றும் மதிப்பாய்வு செய்வதற்கு ரூபா 102.5 மில்லியன் எனவும் மதிப்பிட்டிருந்தது.மேலும், ரூபா 56,890 கேள்விபத்திர செயற்பாட்டுக்கு அழைப்பு விடுவதற்கு பத்திரிகை அறிவித்தலிற்கு செலவிடப்பட்டது. மறுகட்டமைப்பு செய்யப்படாததால் இந்த செலவு ஒரு பொருளியலற்ற செலவாக அவதானிக்கப்பட்டது. | இயக்குனர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட இயக்குனர் சபை பத்திர இல 179/08/2018 த்தில் முன்னைய தலைவர் அலுவலகத்தை மறு சீரமைப்பதற்காக இலங்கை கட்டிடகலை நிறுவனத்திடம் இருந்து ஆதரவை பெறப் போவதாக அறிவித்திருந்தார். இலங்கை கட்டிடகலை நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி,மொத்த மறு கட்டமைப்பு செலவு ரூபா 102.5 மில்லியன் ஆகும்.மறு கட்டமைப்பிற்காக இயக்குனர் சபை 20 மில்லியனை அனுமதித்த காரணத்தால் இந்த வேலை நிறுத்தப்பட்டது.இந்த காரணத்தால்,2019 ற்கான செயல்திட்டம் மற்றும் பாதீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | அரச பெறுகைகள் வழிகாட்டலை பின்பற்ற வேண்டும் மற்றும் குறைந்த செலவில் மறுகட்டமைப்பு செய்வதற்குரிய மதிப்பிட்ட செலவை தயாரிக்க வேண்டும். |